ராணி
காமிக்ஸ்
ஜேம்ஸ்பாண்டு 007
அதிரடி ஆவேசம்!
அந்தப்புர
இரகசியம்
ண்ணப் படக்கதை

அண்ணல் அம்பேத்கார்

தன்னலம் பாராத நல்லவராம் – என்றும்
தன்மானம் காத்திட்ட வல்லவராம்!
அண்ணல் எனும் எங்கள் அம்பேத்கார் – யாருக்கும்
அஞ்சாத நெஞ்சம் படைத்தவராம்!

நீதி வழியில் நடந்தவராம்! – மனித
நேயம் வளர்த்திட்ட தூயவராம்!
சாதிக் கொடுமைகள் களைந்தவராம்! – நம்
சமுதாயம் மேம்பட வாழ்ந்தவராம்!

நாட்டு விடுதலை கேட்குமுன்னே! – இவர்
நமக்கு விடுதலை கேட்டவராம்!
கோட்டைகள் கையில் கிடைக்குமுன்னே – நம்
கொடியை உயர்த்திய பெருந்தகையாம்!

'தீண்டாமை' குற்றம் என உரைத்தார்! – அதை
தேசத்தின் சட்டமாய் எழுதிவைத்தார்!
வேண்டாம் பிரிவினை என்றுரைத்தார்! – அன்பு
வெல்லுமே என்றே எடுத்துரைத்தார்!

–தமிழரசன்.

ராணி காமிக்ஸ் – 476
(மாதம் இருமுறை இதழ்)
ஏப்ரல் 16, 2004

ஜேம்ஸ்பாண்டு 007

அதிரடிப் பாய்ச்சல்!

அந்தப்புர ரகசியம்

GUNA KARUR



ஒரு நட்சத்திர ஓட்டல். ஒரு பெண் சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.
சர்வர் ஒருசிறு உதவி செய்வீர்களா?
சொல்லுங்கள்!
அதோ அவரிடம் இந்தச் சீட்டைக் கொடுத்து விடுங்கள்!
சார்! அந்த அம்மா இந்தச் சீட்டை உங்களிடம் கொடுக்கச் சொன்னார்.
ஜேம்ஸ்பாண்டு அதைப் படித்தார்.
என் மேசைக்கு வரவும்.
ஜேம்ஸ் அங்கே சென்றார்.
நீங்கள் ஜேம்ஸ் பாண்டுதானே?
நீ யார்?
மன்னரின் மர்மச் சாவு பற்றித் துப்பறியத்தானே வந்திருக்கிறீர்கள்?
உனக்கு எப்படித் தெரியும்

நீங்கள் தேடிவந்துள்ள ரசீத்தின் காதலி, நான். என்னோடு வாருங்கள்!
அரபு நாட்டு மன்னர் ஒருவர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டு புதிய மன்னர் பதவி ஏற்றார்.
மன்னர் உயிரோடு இருக்கக் கூடும் என்று ரசீத் நினைக்கிறார்.
எங்கள் சந்தேகமும் அதுதான்!
அந்த இரகசியத்தை அறியத்தான் என்னை அனுப்பியிருக்கிறார்கள்
நீங்கள் கதவைத் திறந்து உள்ளே போங்கள்! நான் பின்னே வருகிறேன்!
அதே நேரம், இன்னொரு கார் வந்தது!
அதோ, பாத்திமா கார்!
ரசீத் எங்கே? நீ ஏன் படுத்து விட்டாய்? உடம்பு சரியில்லையா?

முதலில் வெளியே போங்கள்!
இதுக்குத்தான் என்னை இங்கே கூட்டி வந்தாயா?
இந்தப் படத்தைக் கொடுக்கத்தான். அதற்குள்...
என்ன ஆயிற்று?
வெளியே போங்கள்!
போக மாட்டேன்!
படத்தைக் கொடு!
அது என் காதலனின் படம்!
ரசீத் படமா?
அவனை சந்திக்கத் தானே நான் வந்திருக் கிறேன்!

நீங்கள் வந்திருக்கும் செய்தி சுல்தான் ஆட்களுக்குத் தெரிந்துவிட்டது!
அது எப்படி உனக்குத் தெரியும்?
நீ யார்? உண்மையைச் சொல்!
குறிவைத்தவனை ஜேம்ஸ், கண்ணாடியில் பார்த்து விட்டார்!!
ஒரு மது பாட்டிலை தூக்கி வீசினார்!
படார்!
பாத்திமா மீது குண்டு பாய்ந்தது!
ஆ!

அடிபட்டு விழுந்தவனை ஜேம்ஸ் பிடித்தார்!
நீ யார்?
அவன் திடீர் என்று எழுந்தான்!
உனக்கு எமன்!
நான் எமனுக்கு எமன்!
அவன் ஓடி, மாடியிலிருந்து கீழே குதித்தான்!
அவனை விடக்கூடாது!
ஜேம்ஸ்பாண்டு வேகமாகக் கீழே இறங்கினார்!
அவனைப் பிடித்தால், பல இரகசியங்கள் தெரியும்!

ஜேம்ஸ், வீதிக்கு வந்தார்.
ஓ... தப்பி விட்டானே!
இவனும் ஓடிவிட்டான்! அவளும் செத்துவிட்டாள்! ரசீத்தை எப்படிக் கண்டுபிடிப்பது?
படத்தின் பின்னே முகவரி இருந்ததே...
இந்த வீடுதான்! பழைய மன்னரின் உண்மையான ஊழியன், ரசீத்! மன்னரைப் பற்றிய மர்மம் அவனுக்குத் தெரிந்திருக்கும்!
வீடு பூட்டியிருக்கிறதே?
கதவைத் தள்ளினார்.
சும்மாதான் சாத்தியிருக்கிறது!

ஜேம்ஸ், வீட்டுக்குள் நுழைந்தார்.
யாரும் இல்லையா?
யாரோ விழுந்து கிடக்கிறாரே...
ஆ! ரசீத்!!
புதிய சுல்தானின் ஆட்கள் செய்த வேலையா?
வெளியில் கார் வந்த சத்தம் கேட்கிறதே?
போலீசார் வந்தார்கள்!
கொலைகாரன் தப்பிவிடக் கூடாது!



ஜேம்ஸ் எட்டிப்பார்த்தார்.
போலீஸ்! கொலைகாரர்களே போலீசுக்குத் தகவல் கொடுத்திருப்பார்களோ?
போலீசார், வீட்டுக்குள் பாய்ந்தார்கள்!
புது சுல்தான் வந்தது முதல், கொலைகள் அன்றாடக் காட்சி ஆகிவிட்டன!
ஜேம்ஸ், கதவுக்குப் பின்னே பதுங்கிக்கொண்டார்!
வீடு முழுக்கத் தேடுங்கள்!
தப்பிவிட வேண்டும்! இல்லையென்றால் நான் வந்த வேலை கெட்டுவிடும்!
கொலைகாரன் இங்கேதான் பதுங்கி இருப்பதாகத் தகவல்!
நன்றாகத் தேடுங்கள்!
இன்ஸ்பெக்டர் பார்த்து விட்டார்!
இதோ, கொலைகாரன்!

ஜேம்ஸ்பாண்டு தப்பிக்க முயற்சித்தார்!
பிடியுங்கள்!
போலீசார் சுற்றிவளைத்தார்கள்!
கொலைகாரனை விடாதீர்கள்!
ஆ!
ஒரு போலீஸ்காரர், கைத் தடியால் ஓங்கி அடித்தார்!
ஆணையர் வருவார்! அதுவரை இங்கே இரு!!
ஜேம்ஸ்பாண்டு, சிறையில் அடைக்கப்பட்டார்!
சிறிது நேரத்தில்...
எங்கே அழைத்துப் போகிறீர்கள்?
ஆணையர் வந்துவிட்டார்!
ஆணையர் முன், ஜேம்ஸ் கொண்டுவரப்பட்டார்.
நல்லவேளை, வெள்ளையர்!

ஆணையர் விசாரித்தார்
நீ யார்? ஏன் ரசீத்தைக் கொலை செய்தாய்?
உங்களிடம் கொஞ்சம் தனிமையில் பேசவேண்டும்!
மற்றவர்கள் வெளியே போய்விட்டார்கள்
நீங்கள் எதுக்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்!
நான் 007
மன்னரைப் பற்றிய இரகசியம் ரசீத்துக்குத் தெரியும். அதனால் அவனது உயிருக்குக் குறிவைத்தார்கள்!
மன்னர் உயிரோடு இருக்கிறார் அல்லவா?
அது அரண்மனை இரகசியம்!
மன்னர் இப்போது எங்கே இருக்கிறார்?
மன்னரின் தம்பியே மன்னரைக் கொன்றுவிட்டு, புதிய சுல்தான் ஆகிவிட்டார் என்றுதான் இங்கே பேச்சு!

அது ரசீத்துக்குத் தெரியும்!
அதுதான் அவனைக் கொலைசெய்து விட்டார்கள்.!
நான் அரண்மனைக்குள் புகுந்துவிட்டால், மர்மத்தை உடைத்துவிடுவேன்!
அரண்மனை, நடுக்கடலில் இருக்கிறது
அங்கே எப்படிப் போவது?
போக முயற்சிப்பது, உயிருக்கே ஆபத்து!
ஆயுதம் தாங்கிய எந்திரப் படகுகள் சுற்றிச் சுற்றி வருகின்றன!
நானோ பாதுகாப்பு அதிகாரி! இதற்கு மேல் எதுவும் செய்ய முடியாது!!
மிகவும் நன்றி! நான் வருகிறேன்!!


உங்களை வெளியே விட்டால், என் பெயர் கெட்டுவிடும்! எனவே, என்னை அடித்துப் போட்டு விடுங்கள்!
லண்டன். இரகசிய போலீஸ் தலைமை நிலையம்.
சார்! ஜேம்ஸ்பாண்டு பேசுகிறார்!
தலைமை நிலையத்துடன் ஜேம்ஸ்பாண்டு தொடர்பு கொண்டார்.
நீங்கள் சந்திக்கச் சொன்ன ரசீத்தைக் கொலை செய்துவிட்டார்கள்.
பரவாயில்லை! இத்தாலி வழியாக அங்கே வரும் ஒரு கப்பலில் ஜூலியை அனுப்புகிறேன்.

இத்தாலியில் அவளை சந்தி! அதுவரை தலைமறைவாயிரு!!
நாலு நாளில் கப்பல் வந்தது.
அலோ ஜூலி.
தனிமையில் போரடித்துப் போனேன்!
இப்போது ஜாலிதானே!!
பாஸ் என்ன சொல்லி அனுப்பினார்?
ஒரு கடிதம் கொடுத்து அனுப்பியிருக்கிறார்!
ஜேம்ஸ் கடிதத்தைப் படித்தார்.
இந்தக் கப்பலில் நான் வேலைக்குச் சேரவேண்டுமாம்!
இந்தக் கப்பல் துபாய்க்குப் போகிறது!

நான் சுல்தானின் அரண்மனைக்குள் அல்லவா நுழைய வேண்டும்!
நாம் அனுப்பிய அழகி சுபைதா, அரண்மனையில்தான் இருக்கிறாள்!
சுபைதா ஒரு உளவாளி என்பது தெரியாமல், புதிய சுல்தான் அவளை அந்தப்புரத்தில் வைத்திருக்கிறார்!
அந்நிய ஆண்கள் அந்தப்புரத்துள் போனால் தலையை வெட்டி விடுவார்களே!
சுபைதா உங்கள் தலையைக் காப்பாற்றுவாள்!
சுபைதாவை எப்படிச் சந்திப்பது?
முதலில் கப்பல் தலைவரைப் பாருங்கள்!
எதுக்கு?
அவரிடம் பாஸ் ஏதோ சொல்லி அனுப்பியிருக்கிறார்!

ஜேம்ஸ் கப்பலுக்குப் போனார்!
கேப்டன், நான் ஜேம்ஸ்பாண்டு!
அப்போது ஒருவனை படுக்கையில் தூக்கிப் போனார்கள்.
அவனை மருத்துவமனையில் சேருங்கள்!
அவனுக்கு உடல் நலம் இல்லையா?
ஆமாம். அந்த ஆளுக்குப் பதில் உங்களை இங்கே வேலையில் சேர்த்திருக்கிறேன்!
எனக்குக் கப்பலில் வேலையா?
சத்தமில்லாமல் வேலையை ஒப்புக்கொள் ளுங்கள்!
கப்பல் கிளம்பியது!
நான் அரண்மனைக்குள் நுழைய வேண்டுமே?


அதுக்குத்தான் புதிய சுல்தானுக்கு ஒரு பரிசுப்பொருள் கொண்டு போகிறோம்!
புதிய சுல்தானுக்கு 'பச்சை'ப்படம் பார்ப்பது என்றால் இச்சை அதிகம்!
சினிமா தியேட்டர் அளவுக்கு படம் தெரிய ஒரு எந்திரம் செய்திருக்கிறோம்!
கப்பல், துறைமுகத்தை அடைந்தது!
இது சுல்தானுக்கு, எங்கள் பிறந்தநாள் பரிசு!

சுல்தானைப் பார்க்க கேப்டன் போனார்!
உள்ளே வாருங்கள் கேப்டன்!
கேப்டன், சுல்தானை சந்தித்தார்!
உங்கள் பிறந்தநாள் பரிசை உள்ளே
கொண்டுவர அனுமதிக்க வேண்டும்!
சுல்தான் அனுமதித்து விட்டார்!
என்ன இது?
கவனமாக எடுங்கள்!
இதுதான் எங்கள் பிறந்தநாள் பரிசு!


சினிமா தியேட்டரில் படம் பார்ப்பது போலிருக்கும்!
உங்களுக்குப் பிடித்த படங்களை அரண்மனையில் இருந்தே பார்க்கலாம்!
இந்தப் படங்களை இங்கே பார்க்கக் கூடாது! இதை அந்தப்புரத்தில் கொண்டுபோய் வையுங்கள்.

இரவு முழுக்க சுல்தான் படம் பார்த்தார்
போதும் மூடுங்கள்! அழகிகளை வரச் சொல்லுங்கள்!
திரையை மூடிய சிறிது நேரத்தில், பின்பக்கம் தானே திறந்தது!
கிரீச்!
சினிமாக் கருவியின் அடிப் பாகத்தில் பதுங்கியிருந்த ஜேம்ஸ்பாண்டு வெளியே வந்தார்!
கேப்டன் உதவியை மறக்க முடியாது!
இது அந்தப்புரத்தின் வரைபடம்! அழகிகள் இருக்குமிடம்...
உள்ளே போய்ப் பார்ப்போம்!
அந்நேரம் காவல்காரன் பார்த்து விட்டான்!
யாரடா நீ? எப்படி அந்தப்புரத்துள் வந்தாய்?

ஜேம்ஸ்பாண்டு மின்னல் வேகத்தில் செயல் பட்டார்!
வாளைக் கீழே போடு!
துப்பாக்கியால் சுட்டால் அந்தப்புரமே விழித்துக் கொள் ளுமே
அருகில் கிடந்த குறுமேசையைத் தூக்கினார்!
டங்
அது ஜேம்சுக்குக் கேடயமாகப் பயன்பட்டது!
ஆனால், வெட்டுப்பட்டு இரண்டாகப் பிளந்தது!
என் வாளின் சக்தியைத் தெரிந்துகொள்!
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்!
டங்

ஜேம்ஸ், உடைந்த மேஜையால் தாக்கினார் !
இன்னும் ஒன்று...
படார் !
ஓங்கி ஒரு அடி !
டமார் !
அழகி சுபைதா எங்கே இருக்கிறாள்?
அவளிடம் என்னை அழைத்துப் போ !

முடியாது!
உன் தலை, தரையில் உருண்டுவிடும்!
வேண்டாம்... வேண்டாம்! அழைத்துப் போகிறேன்!
ஓட முயற்சித்தால் என் துப்பாக்கி வெடிக்கும்!
என்ன செய்யப் போகிறான்?
ஜன்னல் வழியே பார், அழகிகள் தெரிவார்கள்!

எனக்கு சுபைதாதான் வேண்டும்!
சுபைதா...?
அழகி சுபைதா இங்கேதானே இருக்கிறாள்?
என்னோடு வா!
ஒரு பெண் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தாள்!
அதோ, சுபைதா!
ஜேம்ஸ் அதிர்ந்தார்!
அந்தப்புரத்தில்... ஒரு அழகிக்கு சித்ரவதையா?
அவளைக் கீழே இறக்கு!

என் தலை போய்விடும்!
அத்தனையும் டாலர் நோட்டு! உனக்குத்தான்!
பணத்துக்கு மயங்கினான்!
மெல்ல...!
உயிர் இருக்கிறது!
சுபைதா மெல்லக் கண்விழித்தாள்.
பயப்படாதே! நான் ஜேம்ஸ்பாண்டு!
அவளுக்கு திரைச் சேலைகளை ஜேம்ஸ் கொடுத்தார்!
என்ன ஆயிற்று சுபைதா?

என் அழகைப் பயன்படுத்தி அந்தப்புரத்தில் நுழைந்தேன்! சுல்தானின் ஆசை நாயகியாக இருந்தேன்!
நான் இரகசிய உளவாளி என்பது எப்படியோ சுல்தானுக்குத் தெரிந்துவிட்டது!
அதுதான் இந்தத் தண்டனையா?
பழைய மன்னரைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா?
அவரை அரண்மனைக்குள் தான் மறைத்துவைத்திருப்பதாகக் கேள்வி!
அரண்மனைக்குள் போக முடியுமா?
அந்தப்புரத்துள்ளேயே வந்துவிட்டீர்கள்!
அரண்மனைக்கு வந்தார்கள்.
எப்படியாவது உள்ளே நுழையவேண்டுமே?

காவல் கடுமையாக இருக்கிறது! கவனம்!
என் கையில் துப்பாக்கி இருக்கும் வரை பயமே வேண்டாம்!
இங்கு எங்காவது பாதாள அறையில்தான் அடைத்து வைத்திருப்பார்கள்!
தப்பிப் போக ஒரு கார் வேண்டியிருக்கும்!
அதோ, ஒரு கார் நிற்கிறதே!

நீ காரில் உட்கார்ந்திரு!
நீங்கள் சீக்கிரம் வந்துவிடுங்கள்!
சுபைதா காரில் ஏறிக்கொண்டாள்!
என்னைப் பற்றிக் கவலைப்படாதே! நான் ஜேம்ஸ்பாண்டு!!
அரண்மனைக்குள் போக ஏதாவது இரகசிய பாதை இருக்கிறதா?
வாருங்கள், பார்ப்போம்!
சுரங்கப் பாதை போலத் தெரிகிறதே!


அப்போது ஒரு ஜீப் வந்தது!
ஜீப்பில் அரண்மனைக் காவலாளிகள் வந்தார்கள்!
காரிலே யார்?
காருக்கு வந்தார்கள்.
தெரியவில்லையா? சுபைதா!
யாா இந்த அழகி?
அந்தப்புரத்தில் அந்தரத்தில் தொங்கவிடப் பட்டிருந்தாளே! இங்கே எப்படி வந்தாள்?
அதேநேரம், ஜேம்ஸ்பாண்டு சுரங்கப்பாதையில் சென்று கொண்டிருந்தார்.
யாரோ வருவது போலத் தெரிகிறதே?

மறைந்து கொள்!
அரண்மனைக் காவலாளிகள் வந்தார்கள்.
டுமீல்!
அவன் ஜேம்ஸ்பாண்டு அல்லவா?
ஜேம்சும் அவனை அடையாளம் கண்டுகொண்டார்!
ரசீத்தின் காதலியை சுட்டுக் கொன்றுவிட்டு ஓடியவன் அல்லவா, இவன்!
சிங்கத்தின் குகைக்குள்ளேயே நுழைந்துவிட்டானே!


ஏய்! மன்னரை எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள்!
பின்னால் திரும்பிப்பார்!
பார்த்த ஜேம்ஸ்பாண்டு அதிர்ந்தார்!
ஆ! சுபைதா!!
துப்பாக்கியைக் கீழே போடு! சரண் அடைந்துவிடு!!
சுபைதாவை நீண்ட கயிறில் கட்டியிருந்தார்கள்!
இல்லையென்றால், சுபைதாவை என் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்துவிடும்!

மூன்று... இரண்டு... ஒன்று...
பொறு! துப்பாக்கியைக் கீழே போட்டு விடுகிறேன்!
இப்போது சுபைதா தான் முக்கியம்!
அவனைப் பிடித்துக் கட்டுங்கள்!
கொஞ்சம் பொறு!

சுல்தான் வருகிறார்!
சுல்தான் வந்தார்.
அவன் ஜேம்ஸ்பாண்டு! சுபைதாவை மீட்டுப்போக வந்திருக்கிறான்!!
இருவருக்கும் சரியான தண்டனை கொடுக்கவேண்டும்!
இருவரையும் இந்த அறைக்குள் தள்ளுங்கள்!
அவன் கையைக் கட்டிவிட்டு, கதவைப் பூட்டுங்கள்!


பசியோடிருக்கும் வேங்கையைத் திறந்துவிடுங்கள் !
வேங்கையைக் கொண்டுவந்தார்கள் ! -
சீக்கிரம் அவிழ்த்துவிடு !
-திறந்துவிடு !!
வேங்கை உறுமிக்கொண்டு வந்தது !
பயப்படாதே அவிழ்த்துவிடு !

நீ விலகிக்கொள்!
சொய்...ங்...ங்...
ஜேம்ஸ், மண்குதிரால் ஓங்கி அடித்தார்!
படார்!
வேங்கை அடிபட்டு விழுந்தது!
அதன் கதை முடிந்தது!
வா, ஓடி விடுவோம்!
ஆனால், அடிபட்ட வேங்கை ஆவேசமாக எழுந்தது!
கொர்...ர்...
ஓ... உயிரோடுதான் இருக்கிறது!

உடைந்த ஓடு ஒன்றை எடுக்க ஜேம்ஸ் முயன்றார்!
கொர்...ர்...
புயல் வேகத்தில் வேங்கை பாய்ந்தது.
சொய்ங்...
அறைக்கு வெளியில்...
அதற்குத்தான் அவர்களுக்கு சரியான தண்டனை கிடைத்துவிட்டதே!
சினிமா எந்திரத்துள் பதுங்கி இருந்திருப்பானோ?
அவன் எப்படி அந்தப்புரத்துள் வந்தான்?
சே! என்னை ஏமாளி ஆக்கிவிட்டார்களே!!
அறைக்குள்... ஜேம்ஸ், புலியுடன் கடுமையாகப் போராடினார்!
கொர்...ர்...
சர்...ர்...ர்...

சுபைதா! பயப்படாமல் என் பக்கம் வா...
வ... வ... வருகிறேன்!
அதன் பக்கத்தில் போய் அது போலவே உறுமு!!
சுபைதா பயந்து நடுங்கிக்கொண்டே...
கொர்...ர்...ர்... கொர்...ர்...ர்...
வேங்கையும் பதிலுக்கு உறுமியது!
கொர்...ர்...
அதே நேரம்...
படார்!

வேங்கையைத் தூக்கிப் பந்தாடினார், ஜேம்ஸ்!
இதைக் கொன்றால்தான் எனக்கு விடுதலை!
கூர்மையான ஓட்டினால் குத்தினார்!
சதக்!
ஜேம்ஸ்பாண்டு என்றால் ஜேம்ஸ்பாண்டுதான்!
அறைக்கு வெளியில்...
இந்நேரம் எலும்புக்கூடு கூட இருக்காது!
உள்ளே போய்ப் பார்ப்போம்!
யாரையும் காணோமே!

பார்த்துப் போ!
திடீர் என்று ஜேம்ஸ் பாய்ந்தார்!
அம்மா!
ஆ! நீ சாகவில்லையா?
டுமீல்...
டுமீல்...
எத்தனை கொலை!

இதுக்கே பயந்தால் எப்படி?
மன்னரைக் காப்பாற்ற வேண்டும்!
புதிய சுல்தான்
என்ன, துப்பாக்கி சத்தம் கேட்கிறது?
உங்கள் எதிரி எமலோகத்துக்கு அனுப்பப்படுகிறான், சுல்தான்!
என்னை எதிர்ப்பவர்களின் இறுதி முடிவு இதுதான்!
ஜேம்ஸ், மன்னரைத் தேடினார்.
இந்தப் பாதை எங்கே போகிறது என்று தெரியவில்லையே?

இங்கேதான் மன்னரை அடைத்து வைத்திருக்க வேண்டும்!
அங்கே ஒரு எமகாதகன் காவலுக்கு இருந்தான்!
அவன் மடியில்தான் சாவி இருக்கிறது!
அவனைத் தந்திரமாக ஏமாற்றவேண்டும்!
எப்படி?
முதலில் உன் முகத்தை மறைத்துக்கொள்!

ஏய்... இந்தா...
யாரது?
என்னைப் பாரேன்!
உன் காதலி வந்திருக்கிறேன்!

எழுந்து வந்தான்.
என்னை மறந்துவிட்டீர்களா!
யார்... நினைவில்லையே... அழகு ரதி... யாராக இருந்தால் என்ன?
கதவைத் திறந்தான்!
படார்!

சுல்தான் காத்திருந்தார்!
ஜேம்ஸ், வேங்கைக்குப் பலியானானா. இல்லையா? பார்க்கப் போனவர்களைக் காணோம்! தளபதி, நீ பார்த்து வா!
அதே நேரம்-
நமக்கு வேண்டியது சாவிதான்!
பாதாள அறைக்குள் புகுந்தார்கள்!
மன்னரைக் காணோமே!
தளபதி வந்து பார்த்தார்!
ஆ! வேங்கை அல்லவா செத்துக் கிடக்கிறது!!



போகப் போக ஒரே இருட்டு!
நாம் இன்னும் கீழே போகவேண்டும் போலிருக்கிறதே!
அங்கே பாருங்கள், யாரோ ஒருவர்!
சீக்கிரம்... திறங்கள்!
உள்ளே வந்தார்கள்.
மன்னரேதான்!
இவர்தான் மன்னர்!


தளபதி திகைத்தார்!
வேங்கையை வெறுங்கையால் அடித்துக் கொன்றிருக்கிறான்! இரு வீரர்களை வீழ்த்திவிட்டான்! ஜேம்ஸ்பாண்டு பலே வீரர்தான் போலிருக்கிறது!

ஜேம்ஸ், மன்னரின் கையைப் பிடித்துப் பார்த்தார்.
மிகவும் பலவீனமாக இருக்கிறார்!

நல்லவேளை, என்னிடம் தண்ணீர் இருந்தது!

இனி பயமில்லை!
இவர் ஜேம்ஸ்பாண்டு உங்கள் உதவிக்கு வந்திருக்கிறார்!
மிகவும் நன்றி!
ஜேம்ஸ்பாண்டு என்ன ஆனான்?
எங்களை அடித்துப் போட்டுவிட்டுத் தப்பி விட்டான்!
மெல்ல வாருங்கள்!
மன்னர் நடக்க முடியாமல் தள்ளாடினார்!
நான் மன்னரைத் தூக்கிக் கொள்ளுகிறேன்!
தளபதி ஓடிவந்தார்!
அவர்கள் எப்படியோ தப்பி ஓடிவிட்டார்கள்!


சுல்தான் அதிர்ந்தார்!
தப்பிவிட்டார்களா! எப்படி?
வேங்கையைக் கொன்றுவிட்டு! நம் வீரர்களை வீழ்த்திவிட்டு!!


காருக்குக் கொண்டு வாருங்கள்!
கார் இன்னும் அங்கே நிற்குமா?

முட்டாளே! தளபதி பதவிக்கே நீ தகுதியற்றவன்! தொலைந்து போ!
குத்திக்கொன்றார்!
யாரங்கே? அபாய மணி ஒலிக்கட்டும்!
கார் இன்னும் இங்கேதான் நிற்கிறது!
மன்னரை உள்ளே தள்ளு!

அபாயமணி அலறியதும் அரண்மனை அல்லோலப்பட்டது!
அவர்கள் மன்னனை விடுவிக்கக் கூடும்!
தடுத்து நிறுத்துங்கள்! இல்லையேல் உங்கள் தலை உருளும்!
ஒரு கார் கிளம்பிக் கொண்டிருக் கிறது!
சீக்கிரம் காரை கிளப்பு!
அதோ, ஒரு கார் வருகிறது!

அவர்கள்தான்! விடாதே! விரட்டு!
நம்மைத்தான் விரட்டி வருகிறார்கள்!
நாம் தப்பிவிட்டது சுல்தானுக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறது!
இங்கே எங்காவது பதுங்கலாமா?

யாரும் இடம் தரமாட்டார்கள்!
சுல்தான் தலையை வாங்கி விடுவான்!
நெருங்கி வருகிறார்கள்
எப்படியும் மன்னரைக் காப்பாற்றியாகவேண்டும்!
பற... பற... இன்னும் வேகம்!
துப்பாக்கிக் குண்டு பாயும் தூரத்துக்கு அவர்கள் நெருங்கி விட்டார்கள்!

சுபைதா! நீ காரை ஒட்டு! நான் அவர்களை ஒரு வழி பண்ணுகிறேன்!
மன்னவா! நீங்கள் படுத்துக் கொள்ளுங்கள்!
அவர்கள் நெருங்கி வந்ததும் நல்லதுதான்!
டுமீல்!
விரட்டி வந்த காரின் முன் சக்கரத்தில் குண்டு பாய்ந்தது!
டுமீல்... டுமீல்...
டமார்!


இன்னொரு கார் வேகமாக வருகிறதே?
சுபைதா! அடுத்த திருப்பத்தில் நீ வேகமாகக் காரை திருப்பு!
விரட்டி வந்த காரும் வளைந்தது!
வளைந்த வேகத்தில் கீழே உருண்டது!
ஆ!
தொலைந்தார்கள்!
இனி நாம் மெல்லப் போகலாம்! மன்னருக்கு இதமாக இருக்கும்!!


மீண்டும் ஆபத்து!
என்ன சொல்லுகிறீர்கள்?
மேலே பார்!
ஒரு கெலிகாப்டர் விரட்டிக்கொண்டு வந்தது!
இப்போது என்ன செய்வது?
என் கையில் துப்பாக்கி இருக்கும்போது பயமே இல்லை!
மன்னரே! என்ன பார்க்கிறீர்கள்?

காரில் 'வயர்லெஸ்' இருக்கிறது. யாருக்காவது போன் செய்து உதவிகேட்கலாம்!
யார் உதவுவார்?
அரேபியா மன்னருக்கு போன் செய்து பார்க்கிறேன்!
முதலில் வயர்லெஸ் வேலை செய்கிறதா என்று பாருங்கள்!
கொர்... கொர்... என்று சத்தம் கேட்கிறது.
அலோ... யார் பேசுறது?

யார்?
கஜார் மன்னர் நசுருதீன் என்று சொல்லுகிறார்!
மன்னருடன் பேசவேண்டும்!
அரேபிய எல்லைக்கு வந்துவிட்டோம். காவல்படை நிற்கிறதே!
எல்லை இராணுவ முகாமில்
வயர்லெசில் யாரோ பேசினார்கள். 'கஜார் மன்னர் நசுருதீன் பேசுகிறேன்' என்றார்!

அவர்தான் செத்துவிட்டாரே? அரண்மனையில் சிறைவைக்கப்பட்டிருக்கிறார் என்றும் கேள்வி!
அவர் சிறையிலிருந்து தப்பிவிட்டாராம்! நமது எல்லைக்கு வந்து கொண்டிருக்கிறாராம்!!
எனக்கு உடனே உதவிவேண்டும்! மன்னரிடம் சொல்லுங்கள்!
படை கிளம்பட்டும்!


உங்கள் உதவிக்கு உடனே படை அனுப்ப மன்னர் ஆணையிட்டிருக்கிறார்!
படை கிளம்பிவிட்டது! நீங்கள் தைரியமாக இருங்கள்!
கஜார் எல்லைப் படையை ஜேம்ஸ்பாண்டு தாக்கினார்.
டுமீல்...
ஒரு கெலிகாப்டர் என்னை விரட்டிக்கொண்டு வருகிறது!

என் துப்பாக்கியில் குண்டும் காலி!
அரபுப்படை எப்போது வந்து சேரும் என்று தெரியவில்லையே?
ஹெலிகாப்டர் நெருங்கிவிட்டது!
நமது தலைக்கு மேல் வந்துவிட்டது!
கார்மீது மோது!


அதோ, அரபுப்படை! விரைந்து வருகிறது!!
அரபுப் படைகள் திரண்டுவந்தன!
தப்பித்தோம்!
எல்லையைத் தாண்டி வர எங்களுக்கு உத்தரவு இல்லை!
அந்த டாங்கை என்னிடம் கொடு!
கஜார் மன்னனான நசுருதீன் சொல்லுகிறேன்– அரபுப்படை என் எல்லைக்குள் வரலாம்!
ஜேம்ஸ்பாண்டு, டாங்கில் ஏறினார்!


கெலிகாப்டரை ஜேம்ஸ்பாண்டு சுட்டு வீழ்த்திவிட்டார்!


போலி சுல்தானைப் பிடிக்கவேண்டும்! புறப்படுங்கள்!!
எதிர்ப்பு இருக்குமே?

மன்னர், ஊருக்குள் புகுந்தார். மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்!

மன்னர், படையுடன் வரும் செய்திகேட்டு, போலி சுல்தான் தற்கொலை செய்துகொண்டான்!

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு வெளியிட்டவர்: சி. கல்யாண சுந்தரம், ராணி பிரஸ், 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 86, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை—600 007.

அடுத்த காமிக்ஸ்

முகமூடி மாயாவி
அதிரடி சாகசம்!

ஆள் விழுங்கிப் பூ

வண்ணப் படக்கதை

மனித உயிரை காவு கேட்கும் பூச்செடி! மாயாவி வெட்டி வீழ்த்தியது எப்படி?

மே 1-ந்தேதி "ராணி காமிக்ஸ்" பாருங்கள்!

"ராணி காமிக்ஸ்", சென்னை -600 007.

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்